# துணை வேந்தரின் வரவேற்புரை

அனைவருக்கும் இனிய காலை வணக்கம். வன்னிப்பிராந்தியத்தின் வரலாற்றின் மைல்கல்லான வவுனியாப் பல்கலைக்கழகத்தின் அங்குரார்ப்பண வைபவத்திற்கு எமது அழைப்பினை ஏற்று வருகைதந்திருக்கும் மதகுருமார்களை முதற்கண் சிரம் தாழ்த்தி வரவேற்கின்றேன்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வளாகமாக இருந்த இக்கல்வி நிறுவனத்தினை சுயாதீனமான ஒரு பல்கலைக்கழகமாக அங்கீகரித்து அதன் அங்குரார்ப்பண விழாவிற்கு தன் வேலைப்பழுவின் மத்தியிலும் நேரத்தை ஒதுக்கி வருகை தந்து சிறப்பித்துக்கொண்டிருக்கும் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அதிமேதகு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச அவர்களை நன்றி உணர்வுடன் வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இப்பல்கலைக்கழகம் உருவாக வேண்டும் என்ற எண்ணக்கருவை 2004 ஆம் ஆண்டில் கல்வி அமைச்சராக இருந்த போதே தன்னகத்தே கொண்டிருந்த இன்றைய கல்வி அமைச்சர் கௌரவ தினேஸ் குணவர்தன அவர்களையும் இவ்வாறே வரவேற்கின்றேன்.

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சின் கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களையும் வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

வட மாகாண சபையின் கௌரவ ஆளுநர் ஜீவன் தியாகராஜா அவர்களையும் அன்புடன் வரவேற்கின்றேன்.

தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதேசத்தின் அபிவிருத்தி தொடர்பான அதிமுக்கியத்துவம் வாய்ந்த இந்த வைபவத்திற்கு வருகை தந்திருக்கும் வன்னி மாவட்ட கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களான காதர் மஸ்தான், குலசிங்கம் திலீபன் ஆகியோரையும் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான சிவநாதன் கிஷோர் அவர்களையும் அத்துடன் இங்கு வருகை தந்திருக்கும் ஏனைய கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களான அனுப பஸ்குவல், யதாமினி குனவர்தன, இசுரு தொடன்கொட ஆகியோரையும் வருக வருக என வரவேற்கின்றேன்.

தன்னுடைய அர்ப்பணிப்பான செயற்பாடுகள் மூலம் உருவாகியிருக்கும் இப் பல்கலைக்கழகத்தின் அங்குரார்ப்பண வைபவத்திற்கு வருகைதந்திருக்கும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க அவர்களை அன்புடன் வரவேற்கின்றேன்.

அவ்வாறே பல்கலைக்கழக உருவாக்கத்தில் ஆதரவாகச் செயற்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களையும் வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

புத்துருவாக்கம் பெற்றுள்ள எமது பல்கலைக்கழகத்தின் முதலாவது வேந்தரான கௌரவத்துக்குரிய கலாநிதி மோகனதாஸ் அவர்களையும் பணிவன்புடன் வரவேற்கின்றேன்.

எமது பல்கைக்கழக அங்குரார்ப்பண வைபவத்திற்கு எங்கள் அழைப்பினை ஏற்று வருகை தந்திருக்கும் ஏனைய பல்கலைக்கழக உபவேந்தர்கள், வளாக முதல்வர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர்கள், வவுனியா வளாக முன்னாள் முதல்வர்கள் அனைவரையும் அன்போடு வரவேற்கிறேன்.

குறிப்பாக தாய்ப்பல்கலைக்கழகமான யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சிறீ சற்குணராஜா அவர்களையும் பீடாதிபதிகள், பதிவாளர், நிதியாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் அனைவரையும் வரவேற்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

அத்துடன் வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு, மாவட்டங்களின் அரசாங்க அதிபர்களையும் அன்போடு வரவேற்கின்றேன்.

ஜனாதிபதி செயலகம் மற்றும் கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகள், அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் மற்றும் வட மாகாண சபையின் பிரதம செயலாளர், செயலாளர்கள், பணிப்பாளர்கள் மாவட்ட அரச திணைக்கள தலைவர்கள், உத்தியோகத்தர்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கின்றேன்.

ஜனாதிபதி செயலக பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் அனைத்து பாதுகாப்பு அதிகாரிகள், உத்தியோகத்தர்களையும் அன்புடன் வரவேற்கின்றேன்.

எமது பல்கலைக்கழக பேரவை உறுப்பினர்கள், மூதவை உறுப்பினர்கள், பீடாதிபதிகள், துறைத்தலைவர்கள், சிரேஷ்ட விரிவுரையாளர்கள், விரிவுரையாளர்கள், பதிவாளர், நிதியாளர், நிர்வாக உத்தியோகத்தர்கள், போதனாசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள், ஆசிரிய சங்கத்தலைவர், ஊழிய சங்கத்தலைவர், மாணவ சங்க தலைவர்கள், மாணவச்செல்வங்கள் அனைவரையும் வருக வருக என வரவேற்கின்றேன்.

இந்நிகழ்வை சிறப்பித்துகொண்டிருக்கும் கல்வியாளர்கள், கலை இலக்கியவாதிகள், அரசியல்பிரமுகர்கள், எமது நலன்விரும்பிகள் அனைவரையும் இரு கரம் கூப்பி வரவேற்கின்றேன்.

இந்தப்பொன்னான சந்தர்ப்பத்தில் இப்பல்கலைக்கழகத்தின் தோற்றம் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூறவேண்டியது எனது கடப்பாடாகும். இக்கல்வி நிறுவனமானது 1991 ஆம் ஆண்டு வடமாகாண இணைந்த பல்கலைக்கழக கல்லூரியாக ஆரம்பிக்கப்பட்டு பின்பு 1997 ஆம் ஆண்டு சித்திரை மாதம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகமாக தரம் உயர்த்தப்பட்டது. நீண்ட காலக்கோரிக்கையின் விளைவாக 30 வருட காலப்பகுதியின் பின்பு 2021 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 1ஆம் திகதி வவுனியா பல்கலைக்கழகமாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

இந்த தருணத்தில் எமது நீண்டகாலக் கோரிக்கையினை கவனத்தில் கொண்டு எமது வளாகத்தினை பல்கலைக்கழகமாக தரமுயர்த்துவதற்கான தீர்மானத்தினை மேற்கொண்ட இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அதிமேதகு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச அவர்களுக்கு எமது பல்கலைக்கழக சமூகம் சார்பாகவும், வன்னி மக்களின் சார்பாகவும் நன்றி கூறுகின்றோம்.

மேலும் இந்த வளாகத்தினை பல்கலைகழகமாகத் தரமுயர்த்த வேண்டும் என்ற தூரநோக்கத்துடன் அயராது உழைத்த பல்கலைக்கழக சமூகம், வன்னிப்பிரதேசத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள், பொதுமக்களுக்கு இந்த தருணத்தில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

எமது பல்கலைக்கழகத்தில் தற்போது பிரயோக விஞ்ஞான பீடம், வியாபாரக்கற்கைகள் பீடம், தொழிநுட்பகற்கைகள் பீடம் ஆகிய மூன்று பீடங்கள் செயற்படுகின்றன. எமது பல்கலைக்கழக கற்கை நெறிகள் யாவும் ஆங்கில மொழிமூலம் நடாத்தப்படுகின்றது. எமது பல்கலைக்கழக பட்டப்படிப்பினை நிறைவு செய்த மாணவர்களின் தொழில்வாய்ப்புகள் அதிஉச்ச மட்டத்தில் காணப்படுகின்றது.

எமது பல்கலைக்கழகத்தில் இன, மத, மொழி வேறுபாடுகளின்றி பல்லின மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள். இந்தப் பல்கலைக்கழகமானது எமது பிரதேசத்தினதும் தேசத்தினதும் அபிவிருத்திக்காக எமது நாட்டினது தேவையினை அடிப்படையாகக் கொண்டும் இங்கு காணப்படுகின்ற இயற்கை வளங்களினை கருத்திற்கொண்டும் பொருத்தமான புதிய பீடங்களிற்கான முன்மொழிவுகளை பேரவை மட்டத்தில் ஏற்றுக் கொண்டுள்ளது. அவ்வகையான பீடங்களாக மருத்துவபீடம், சூழலியல் விஞ்ஞானபீடம், உல்லாசத்துறை பீடம், மானுடவியலும் சமூகவியலும் பீடம், சுகாதார விஞ்ஞான பீடம், நீர் உயிரின வளர்ப்பு, மீன்பிடி மற்றும் கடல்சார் கற்கைகள் பீடம், கால்நடைகள் பீடம், உயர்பட்ட கற்கைகள் பீடம் போன்றவை முன்மொழியப்பட்டுள்ளன..

எமது பல்கலைக்கழகமானது இளமானிப் பட்டக் கற்கைகளை வழங்குவதோடு நின்றுவிடாது பிராந்திய மற்றும் தேசிய மட்டஅபிவிருத்திற்கான ஆய்வுகளையும் மேற்கொள்வதனூடாக, சமூகத்திற்கான செயற்பாடுகளில் தன்னை அர்ப்பணிப்புடன் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது. மேலும் நாம் புதிய பட்டப்படிப்புக்களையும், உயர்பட்டப்படிப்புக்களையும் ஆரம்பிப்பதற்கான செயற்பாடுகளிலும், உயர்தரமான ஆய்வு நிலையத்தை ஸ்தாபிப்பதிலும், பல்கலைக்கழக அனுமதி பெறாத மாணவர்களுக்கு தேவையான குறுகியகால சான்றிதழ் மற்றும் டிப்ளோமா கற்கைகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றோம். எமது பல்கலைக்கழகமானது தொழில் நிறுவனங்களுடன் இணைந்து பயணிப்பதில் ஆர்வமாகவுள்ளது.

இந்நிறுவனம் ஆரம்பிக்கப்பட இந்த மூன்று தசாப்பதகாலத்தில் நாம் வரையறுக்கப்பட்ட பௌதீக, மனித வளங்களுடன் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் பயணிக்கின்றோம். இந்தச் சந்தர்ப்பத்தில் எமது பல்கலைக்கழக சமூகம் சார்பாக அதிமேதகு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச அவர்களிடம் பின்வரும் கோரிக்கைகளையும் முன்வைக்கின்றோம்.

1. அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட புதிய நிர்மாணப்பணிகளான நிர்வாகக் கட்டடத் தொகுதி, வியாபார கற்கைகள் பீடக் கட்டடத் தொகுதி, ஊழியர்களுக்கான தங்குமிட விடுதி , மற்றும் தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் அங்கிகரிக்கப்பட்ட பிரயோக விஞ்ஞான பீட கட்டடத்தை பூர்த்தி செய்வதற்கான நிர்மான பணி போன்றவற்றை ஆரம்பிப்பதற்கான நிதி ஒதுக்கீடு.

2. புதிய பீடங்களான மருத்துவ பீடம், சூழலியல் விஞ்ஞான பீடம், மானுடவியலும் சமூகவியலும் பீடம் ஆகியவற்றை ஆரம்பிப்பதற்கான அனுமதி.

3. மாணவர்களுக்கும் ஊழியர்களுக்கும் தங்குமிட வசதிகளை அமைப்பதற்கான அனுமதி.

4. மாணவர்கள், ஊழியர்கள் விடுதிக்கு செல்வதற்கான உள்ளகப்பாதை அமைப்பதற்கான அனுமதி.

5. பதவிவெற்றிடங்களை நிரப்புவதற்கான விசேட அனுமதி

6. செயற்பாட்டு முகாமைத்துவ கல்வி நிறுவனத்தினை ஆரம்பிப்பதற்கான அனுமதி

மீண்டும் உங்கள் அனைவரையும் வவுனியா பல்கலைக்கழகம் சார்பாக வருக வருகவென வரவேற்கின்றேன்.

நன்றி.

வணக்கம்.